விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் ? ஆனி 30 ஷவ்வால் 14 இதழ் 150
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-7-84

ஜூலைச் சம்பவங்களுக்கு அனுதாபம் தெரிவித்து

## 25ல் கூட்டணி உண்ணாவிரதம்!

(ஏ. வி. மாணிக்கம்)

கடந்த ஆண்டு ஜூலைச் கலவரங்களுக்கு அனுதாபம் தெரிவித்து, நினைவு கூரும்முகமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டக்குழு, இம்மாதம் 25ம் திகதி உண்ணாவிரதம் இருக்கப்போவதாக கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் தமிழ் மக்கள் பூரணஹர்த்தாலை அமைதியானமுறையில் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் திரு சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் இதனை பொதுச்சபை உறுப்பினர்கள் முன் ஆலோசனைக்கு வைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செயலற்றுப் போயிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொகுதிக்கிளைகளுக்கும் புத்துயிரூட்டி அவை செயல்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன், இன்று தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகளையும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைகளையும் அவற்றில் கூட்டணி எவ்வாறு பங்குவகிக்கப் போகிறதென்பதையும் உணர்த்தும்வகையில் தீவிர பிரசாரம் மேற்கொள்ளவும் கூட்டணித் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

இதன் முதல் கட்டமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர்த் தொகுதிக்கிளையும், யாழ்ப்பாணத் தொகுதிக்கிளையும் இம்மாதம் 15ம் திகதி திருநெல்வேலியிலுள்ள கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில்கூடி ஆலோசனை நடாத்தவுள்ளன.

இக்கூட்டத்தில் சகல கூட்டணி கிளை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 25ம் திகதி நடைபெறவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டம் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் இடம்பெறலாம் என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

● சுழல் துப்பாக்கிகள், குண்டுகளுடன்

# வடபகுதியைச் சேர்ந்த 15 தீவிரவாதிகள் கைது!

## கொள்ளைப்பணம், பிரசுரம் சுவரொட்டிகள் சிக்கின!!

(கொழும்பு)

**வடபகுதியின் பிரதான தீவிரவாத இயக்கமொன்றைச் சேர்ந்த பதினைந்து தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.**

இவர்களிடமிருந்து சுழல் துப்பாக்கிகளும், கைத்துப்பாக்கிகளும், குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் கைதுசெய்யப்பட்ட இடம் கைக்குண்டுத் தொழிற்சாலைபோல் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து வங்கியொன்றில் கொள்ளையடிக்கப்பட்ட பெருந்தொகையான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றில் அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகளும், பிரசுரங்களும் இவர்களிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்களில் 10 பேர் பிரதான தீவிரவாத இயக்கமொன்றில் தீவிர பயிற்சிபெற்றவர்களாம. (வெ)

## சீன ரக துப்பாக்கியுடன் 2 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

சீன ரகத்தைச் சேர்ந்த இரு கைத்துப்பாக்கிகளுடன் இரு இளைஞர்கள் அதிரடிப் படையினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த இரு இளைஞர்களே கைத்துப்பாக்கியுடன் நேற்றிரவு கைது செய்யப்பட்டவர்களாம்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் விசாரணைக்காக பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)

## உரிமைகோரி துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற காரியாலயத்திலுள்ள பதிவு ஏடுகள் அறைக்கு தீவைத்ததும், யாழ். நீதிமன்ற காரியாலய அறைக்கு தீவைக்க முயற்சித்ததும் தமது இயக்கமென 'தமிழ்ஈழ கம்யூனிஸ்ட் கெரில்லா இராணுவப்பிரிவு' உரிமை கோரி துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளது. (மா)

## "சீட்டுப் பிடித்த பணத்தில் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தேன்"

### இளைஞர் மரணவிசாரணையில் தாயார் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''வெலிங்டன் சந்தியில் இறந்து கிடந்தவர் எனது மகன். அவர் எஸ் எஸ்.சி படித்தவர். வீட்டுக்கு வருவார் போவார் எங்கே என்று சொல்வதில்லை''

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா சிறீதரன் (28 வயது) என்பவரின் மரணவிசாரணையில் சாட்சியமளிக்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழா இன்று பிற்பகல் பல்கலைக்கழக வளவில் அமைக்கப்பட்டுள்ள கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் நிலைமையை முன்னிட்டு, ஆடம்பரமற்ற முறையில் பட்டமளிப்பு வைபவம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

பட்டமளிப்புவிழா இன்று பிற்பகல் 2-30க்கு ஆரம்பமாகி 5-30க்கு முடிவடையும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் படித்துமுடித்த 531 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்படும்

முதன்முதலாக 5வருடங்கள் முழுமையாக யாழ். பல்கலைக்கழகத்திலே மருத்துவப் படிப்பை முடித்துக்கொண்ட மருத்துவப் பட்டதாரிகள் இன்று பட்டம் பெற்றுக்கொள்வார்கள். [மா]

அனுராதபுரத்திலிருந்து பஸ்ஸில் வந்த

## நீர்வேலி இளைஞர் மயக்கநிலையில்!

(வவனியா)

அனுரரதபுரத்திலிருந்து பஸ்ஸில் வந்த இளைஞர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அனுராதபுரத்திலிருந்து பஸ்ஸில் வவனியாவை வந்தடைந்த நீர்வேலியைச் சேர்ந்த தியாகராசா ஜெகநீதன் என்ற வாலிபர் போதை நிலையிலிருந்தமைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் மயக்கமுற்றதாகத் தெரிகிறது.

பஸ்ஸில் நண்பர் ஒருவருடன் வந்து கொண்டிருந்த போது பயணி ஒருவர் கேக் ஒன்றைக் கொடுத்ததாகவும் அதன்பின்னர் 'போதை' ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இவருடன் வந்த மற்ற நண்பர் எங்கே போனார் என்பது தெரியவில்லையாம்.

## 23-ல் சர்வகட்சி மகாநாடு

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாடு இம்மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின்

## முறையீடுகள் ஆராயப்பட்டு ஆகஸ்ட்முன் இடமாற்றம்

### இ. த. ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

'இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் மேன் முறையீடுகள் தனித்தனியாக ஆராயப்பட்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக் முன்னராக நீதியான முறையில் இடமாற்றம் வழங்கப்படும்' என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். அத்துடன் 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்திருக்க வேண்டிய தமிழாசிரியர்களின் வருடாந்த இடமாற்றமும் மூன்றும் தவணை ஆரம்பிப்பதற்கு முன்னர் நடைபெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு த. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பருத்தித்துறைக் கிளைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெரும்தொகையான ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து திரு த. மகாசிவம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் விவகாரத்தைப் பொறுத்தமட்டில் 1983 ஜூலையில் இருந்து 1984 மார்ச் வரை கல்வி அமைச்சு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் மாத்திரமே பேச்சுவார்த்தை நடத்திவந்தது.

''இக்காலகட்டத்தில் இடம் பெயர்ந்தஆசிரியர்களுக்கு, வடக்கு கிழக்கு பகுதிகளுக்குத்தற்காலிக இடமாற்றம், இடம் பெயர்ந்த மாவட்டங்களில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கான சம்பளம், மூன்று மாத சம்பள முற்பணம், 1983 டிசம்பரில் மீண்டும் வேலைக்கு திரும்ப விரும்பிய ஆசிரியர்களுக்கு எழுநூற்றைம்பது ரூபாய் முற்பணமும், கடமையை ஏற்றவுடன் அக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதச் சம்பளங்கள், இடம்பெயர்ந்த மாவட்டங்களிலேயே இடப்பெயர்ந்த பெண் ஆசிரியர்களுக்கு அக்ரோபர் தொடக்கம் டிசம்பர் வரைக்குமான மூன்று மாத மொத்தச்சம்பளம் போன்ற பல வசதிகளை இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் தளராத முயற்சியாலேயே பெறத்தக்கதாக

(8ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுடனும் வெறுங்காணியுமாக எட்டுப்பரப்பு காணிகள் மானிப்பாயில் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். உடையார்வளவு, லோட்டன் ரோட், மானிப்பாய். (842)

---

பளையில் 40 ஏக்கர் தென்னம்காணி முழுதும் துப்பரவு பண்ணி சீராக்கப்பட்டு 15 ஏக்கர் ஏற்கனவே தென்னை வைக்கப்பட்டுள்ளது, தொடர்பு கொள்ளவும். கே. விஜயகுமார், 47, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 823

---

தாவடியில் 12 பரப்புக் காணி சகல வசதிகளுடனும் (தொழிற்சாலை அமைக்கச் சிறந்தது) மாங்குளத்தில் மாக்கட்டிற்கு முன்னால் இரு கடைகள் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. மாணிக்கவாசகர், இல. 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 866

---

Bairaha Farm ஒரு நாள் Hisex பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் 23-7-84 அன்று பெற்றுக்கொள்ளலாம். உடன் தொடர்புகொள்ளவும். S. புவனேந்திரன், ''சிங்கம் வளவு'' கோட் ரோட், மல்லாகம். 860

---

பூநகரி கிரிப்பிள்ளையார் கோவில் அருகாமையில் கோரைக்குல் 25 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. உடன் வரவும். க. ஞானி, உறைவில், காங்கேசன்துறை. 864

---

மலிவு விலையில் தமிழ் நாவல்கள் சிறுகதை நூல்கள் விற்பனையாகின்றன. சனி, ஞாயிறு வருக. பிரிய வாசகர் வட்டம், 82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 870

---

நல்ல நிலையிலுள்ள 9 Sri Volks Wagon கார் உடன் விற்பனைக்குண்டு. 66, (புதிய இல. 262) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 869

---

திருநெல்வேலி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையில் (மாதனைபுலம்) ஒருபரப்பும் 16 2/3 குழியும் விற்பனைக்குண்டு. காணியில் கிணறும் பிரயோசனமுள்ள மரங்களும் உள்ளன. விபரங்களுக்கு திருமதி. உ. தங்கமணி, சங்கக்கடையடி, சாயுடை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 794

---

யாழ்ப்பாணம், கண்டி பிரதான வீதியில் 19-ம் மைலுக்கு அருகாமையில் நுணுவில் மேற்கில் மின்தறி நிலையத்திற்குச் சமீபமாக தொழிற்சாலை / வீடு கட்டுவதற்கேற்ற காணி எட்டு பரப்பளவில் விற்பனைக்குண்டு. ச. பொன்னையா, ஆசிரியர், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி 877

---

வவனியா, கொறேப்பத்தானை வீதி, முதலாம் கட்டையில் 4 பரப்புக்காணி சிறு வீட்டுடன் விற்பனைக்குண்டு. பண்டத்தரிப்பு, புனித அந்தோனியார்வீதியில் வசிக்கும் அ. சாமிநாதனுடன் தொடர்பு கொள்ளவும். 875

---

(1) நல்ல நிலையிலுள்ள EN தொடரிலக்க மொரிஸ் மைனர் கார் (2) புதிய நாஷனல் கார் ரேடியோ, ரேப், ஸ்பீக்கர்களுடன் (3) ஒருசெற் புதிய ஸ்ரார் றிம் பிளேட்ஸ்— உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; ஆனந்தா றைக்கோடிங் பார், தாவடிச்சந்தி. 874

## விற்பனைக்கு

உடுப்பிட்டி சந்தைவீதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு ஆர். ஆர். தர்மறட்ணம், சட்டத்தரணி உடுப்பிட்டி. 832

---

33 ஶ்ரீ கொமர் ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு, ஆறுகால் மடம் முன்பாக ஆனைக் கோட்டை. 844

---

மாநகர சபை எல்லைக்குள் புங்கங்குளம் ரோட்டில், புங்கங்குளம் ஸ்ரேஷனுக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. S. றவிநாதன், 25, சப்பேல் வீதி, யாழ்ப்பாணம். 840

---

North town cross broilers நாள் குஞ்சு ரூபா 4-50 சேவல் குஞ்சுகள் 1-65, R I. R. Light Sussex கறுப்பு, வான்கோழி நாள் குஞ்சுகள் செவ்வாய் சனிக்கிழமைகளில் விற்பனையாகும். தொடர்பு: ராதாகிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி 839

---

கோண்டாவில் கிழக்கு பலாலி வீதிக்கு அண்மையில் (200 யாருக்குள்) களிகோயில் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் கொண்ட இரண்டு துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு, 20-7-84க்கு முன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். தொடர்பு: வீ. இ. இரத்தினசிங்கம், 'Lankexpo' இருபாலை வீதி, கோண்டாவில். 878

---

85 Sri தொடர் இலக்கம் கொண்ட தனிநபர் பாவனையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. இல: 33 சிவன்பண்ணைவீதி, கொட்டடியில் இன்றும் நாளையும் காலை 9.00க்கும் 12மணிக்கும் இடையில் பார்வையிடலாம். 873

---

North Town நான்கு நாள் வெள்ளை குஞ்சுகள் ரூ. 6-15. வெள்ளைச் சேவல்குஞ்சுகள் ரூ. 1-65, R. I. R. நாலு நாள் குஞ்சுகள் ரூ. 6-85, குறொஸ் புறோயிலேஸ் ரூ. 4-50. ராதாகிருஷ்ணஸ், 392, நாவலர்வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி 860

## கல்வி

G. C. E. (O. L.) கணிதம் 15 வருட அநுபவம்பெற்ற ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்காக குறைந்தகாலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி. 767

---

M. B. B. S. (MEDICAL COLLEGE) பட்டப்படிப்புகளுக்கான முதல்வருட பயிற்சிகள் திறமையுள்ள டாக்டர்களாலும் விரிவுரையாளர்களாலும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகள் A/L (Bio) உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும், விபரத்துக்கு அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். விண்ணப்ப முடிவு திகதி: 31-8-84 (847)

## வகுப்புகள்

இலண்டன் I. A. B. Part I, தேகாப்பியாசத் தகுதி சான்றிதழுக்கான பயிற்சி (Physical Education)யும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்ப முடிவுதிகதி 31-07-1984 விபரத்துக்கு: அதிபர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

## தேவை

சாரதி தேவை. நடுத்தர வயதுள்ள, வான் செலுத்துவதில் திறமையுள்ளவராக குடும்ப பொறுப்புகள் இல்லாதவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் 17-7-84 காலை 9-30 மணிக்கு நேரில் வரவும். மனேஜர், பவர் அன் கம்பனி, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 871

---

அலுமினிய வார்ப்புத் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. அச்சுப் போடுபவர்கள் (Moulbers) மினுக்குபவர்கள் (Polishers) நேரில் விண்ணப்பிக்கவும். Joson Industries குமாரசாமிப் புலவர் வீதி, சுன்னாகம். 851

---

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கைத்தறி நிலையம் ஒன்றுக்கு பெண் நெசவாளர்கள் தேவை. ஞாயிறு 15ம் திகதி காலை 10 மணிக்கு நேரடியாக வரவும் 'யோகானந்தம்' வியாபாரிமூலை பருத்தித்துறை. 800

---


CLASSES

Sivakee Technical Institute Manipay and Chavakachcheri. Weekend and Daily classes will commence on 1st week of Sept. 84 for the following Lond—Exams. Diploma in Quantity Surveying City and Guilds Lond. May, June 1985. Structural Engineering May/June 1985. Technician Diploma in Building and Civil Engineering—1985. Diploma in Draughtsmanship — 6 months course For particulars, please contact, the Director Sivakee Institute, Moonar malai Lane, Manipay. Near Ladies College, Manipay. (862)

---

2-வது ஆண்டு

நினைவு அஞ்சலி



செல்வன்
சிவஞானம்
ரவிக்குமாரன்

மறைவு: 8-7-1982

என்றும் நிலைத்து நிற்கும்
உன் நினைவிற்கு
இன்றும் எம் அஞ்சலிகள்

குடும்பத்தினர்.
''குமாரோதயம்'',
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை,
(833)

---

## கதவுடைத்துத் திருட்டு

[கோண்டாவில்]

கோண்டாவில் மத்திய மகா வித்தியாலத்தில் இரவு கதவை உடைத்து உட்புகுந்தவர்கள் பாடசாலை மாணவர்களின் தினவரவு இடாப்பு ஆசிரியர்களின் பயிற்சிப் புத்தகம் என்பன திருடப்பட்டுள்ளன.

இது பற்றி பாடசாலை அதிபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். [கி]

---


## சேவை

★ வீடுகளில் புதிய மின்னிணைப்பு வேலைகள்
★ மின் மோட்டர்கள் இணைப்பு
★ மின் மோட்டர் பழுதுபார்த்தல்
மற்றும் சகல மின்சார உபகரணங்களும்
உடன் குறைந்த கட்டணங்களில்
செய்துகொடுக்கப்படும்.

STANLY CENTRE

ஸ்ரான்லி வீதி, (றெயில் கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

---

## கோழி வளர்ப்போருக்கு ஒரு நற்செய்தி

யாழ்ப்பாண சுவாத்தியத்திற்கு ஏற்ற நல்ல இன
கோழிக்குஞ்சுகள்
எந்நேரமும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொகையாகத் தேவைப்படுவோர்
முன்கூட்டியே பதிவு செய்துகொள்வது விரும்பத்தக்கது.
மற்றும் லாபகரமாகக் கோழி வளர்ப்பதற்கு
இலவச ஆலோசனை வழங்கப்படும்.
தகவல்;
திருமதி ப. நற்குணராஜன்,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
(நீர்வேலி கந்தசாமி கோவிலடி) (822)

---

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

கொழும்பு ஸ்ருடியோ

---

## எங்கள் இன்றைய வெளியீடு

★ சிவாஜி, வாணிஶ்ரீ நடித்த

இளைய தலைமுறை

(PYRAMID ORIGINAL)

தரமான படப்பிரதிகளா; இன்றே நாடுங்கள்.
மலிவு வாடகையா? ஆம் ரூபா 10/-மட்டுமே.
தத்ரூபமான மீளப்பதிதலா?
இருக்கவே இருக்கிறார்கள்

குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (876)


---

## பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர்

சம்பள அலகு இல–101.7

600–1000
40X10

மேற்படி சம்பள அலகு அளவில் பொதுமுகாமையாளர் பதவிக்கான வெற்றிடத்துக்கு கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம்செய்பவர் தமது விண்ணப்பத்தினை 25-07-84ந் திகதிக்கு முன்னர் ''தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்வேண்டும்.

### தகைமைகள்

(அ) கூட்டுறவு வேலையாளர் சம்பள அலகு 8ல் முகாமைத்துவ / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது மேற்படி மட்ட பதவியில் 9வது சம்பள அலகில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நிறுவனமொன்றில்முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் [உயர்தர தராதரப்பத்திரம்) க. பொ. த. [உயர்தர தராதரப்பத்திரம்] 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு, ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

திகதி: 6-7-84. [845]

# இந்தியாவின் தேசிய வளர்ச்சிசபை கூட்டத்தில் இருந்து நான்கு முதலமைச்சர்கள் வெளிநடப்பு

## ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தின் எதிரொலி! தமிழ்நாடு கண்டனம்!!

புதுடில்லி, ஜூலை 13

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காகப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியினல் கூட்டப்பட்ட தேசிய வளர்ச்சிச் சபையின் கூட்டத்திலிருந்து நான்கு எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் வெளிநடப்புச் செய்துள்ளார்கள்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் தேசிய வளர்ச்சிச் சபையின் இரண்டு நாள் கூட்டம் நேற்றுப் புதுடில்லியில் ஆரம்பமானது. பிரதமர் திருமதி இந்திரா காந்தியினல் தொடக்கிவைக்கப்பட்ட இக்கூட்டத்தில் மத்திய மந்திரிகள், மாநிலங்களின் முதல் அமைச்சர்கள, அமைச்சர்கள், பஞ்சாப், சிக்கிம் மாநில கவர்னர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. ஜோதிபாசு, கர்ணுடக முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹக்கடே, ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ், திரிபுரா முதலமைச்சர் திரு. நிருபன் சக்கரவர்த்தி ஆகியோரே கூட்டத்திலிருந்து வெளியேறியவர்களாவர்.

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் ஜனுப் பாருக் அப்துல்லா மந்திரிசபையைக் கலைத்தமைக்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாகவே தாங்கள் வெளிநடப்புச் செய்ததாக இவர்கள் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தனர். ''தங்களது நடவடிக்கை மத்திய அரசுக்கு எதிரான ஒத்துழையாமை அல்லவென்றும், இச்செயல் காஷ்மீர் விவகாரத்தில் மத்திய அரசின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையை எதிர்க்கும் வகையிலேயே அமைந்துள்ளதென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தேசிய வளர்ச்சிச் சபையின் கூட்டத்திலிருந்து இந்த நான்கு முதலமைச்சர்களும் வெளியேறியமை குறித்து சபை பின்னர் பலத்த கண்டனம் தெரிவித்தது.

இக்கண்டனத் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கேரள முதலமைச்சர் திரு.கருணுகரன் முன்மொழிந்தார். தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் எஸ். ராமச்சந்திரன் அதனை வழிமொழிந்தார்.

''இந்தியாவின் தேசிய பொருளாதார அபிவிருத்தி குறித்த இந்த முக்கியகூட்டத்திலிருந்து வெளியேறியதன் மூலம் நான்கு முதலமைச்சர்களும் தமது மாநில மக்களின் தேவைகளையும், அவர்களது நலன்களையும் கவனிக்கத் தவறிவிட்டனர். நாட்டின் பொருளாதார விடயம் தொடர்பான ஒரு முக்கிய சபையை இவர்கள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள்'' என்று தேசிய வளர்ச்சிச் சபை கண்டனத் தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

பின்னர் வளர்ச்சிச் சபையின் கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி உரையாற்றுகையில்: ''7-வது ஐந்தாண்டுத் திட்டம் மக்களின் முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் வகையில் அமைந்துள்ளது. உணவு, உற்பத்தி, உழைப்பு என்பனவே இத்திட்டத்தில் முக்கிய இடம் பெறுகிறது. இத்திட்டம் முக்கியமாக மத்திய-மாநில அரசுகளின் கூட்டு முயற்சியாகச் செயற்படுத்தவிருப்பதனல் மத்திய-மாநில அரசுகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அரசியற் காரணங்களுக்காக எதிர்க் கட்சிகள் ஆட்சிபுரியும் மாநிலங்களுக்கு எதிரான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துவருகிறது என்ற குற்றச்சாட்டினையும் அவர் நிராகரித்தார். (சூ)

## உலகின் சனத்தொகைபிறப்பு வீதம் தற்போது அதிகரிப்பு

### சர்வதேச ஸ்தாபனம் கூறுகிறது

வாஷிங்டன், ஜூலை 13

கடந்த 10ஆண்டுகளின் பின்னர் உலகின் சனத்தொகை பிறப்பு வீதம் தற்போது அதிகரித்துள்ளது. இத்தகவலை அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் உலக சனத்தொகை பிறப்பு வீதம் 1.7 என்பதாகவே காணப்பட்டது. ஆனல் இது தற்போது 1.8 வீதமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக உலக நாடுகள் கடைப்பிடிக்கும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் வெற்றியளிக்காததன் காரணத்தினலேயே இந்த பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

இந்த சனத் தொகை பெருக்கம் காரணமாக உலகில் பசி பட்டினி போன்றவை பெருமளவில் ஏற்படலாம் என்றும் இத்தகைய அதிகரித்த சனத்தொகை எதிர்காலத்தில் இயற்கை அழிவுகளான போர் வெள்ளப்பெருக்குபோன்றவற்றினல் மட்டுப்படுத்தப்படலாமென்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டில் சிறப்பாக இயங்கிவரும் சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய நாடுகளை ஏனைய நாடுகள் பின்பற்ற வேண்டுமென்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. [சூ]

## ஆபிரிக்கவிடுதலை இயக்கங்கள் உதவி கோருகின்றன

லண்டன், ஜூலை 13

ஆபிரிக்காவின்தெற்குப்பகுதியில் இயங்கும் விடுதலை இயக்கங்களுக்குஅதிகரித்த ஆதரவும் பண உதவியும் அளிக்குமாறு ஆபிரிக்க ஒற்றுமை விடுலைத் தாபனம் சில நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சோவியத் யூனியன் கிழக்கு ஜேர்மனி, செக்கோ சிலாக்கியா, யூகோசிலாக்கியா, இந்தியா, போன்ற நாடுகளிடமே இந்த தாபனம் அதிகரித்தஉதவியை கோரியுள்ளது.

தமது நியாயகோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இந்த உதவியை அளிக்குமாறு இந்த இயக்கம் கோரியுள்ளது. (சூ)

## பிரான்சின் அரசியலமைப்பு சட்டம் திருத்தப்படும்!

பாரிஸ், ஜூலை 13

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்களைத் திருத்தியமைக்கும்முகமாகப் பிரான்ஸின் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

நேற்று வானெலி தேசிய தொலைக்காட்சியிலும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரான்ஸ் ஜனதிபதி மிட்ராண்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் கல்விக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கை அதிகரிக்கும் ஜனதிபதியின் முயற்சியை எதிர்க்கட்சிகள் எதிர்த்தமையைத் தொடர்ந்து இது தொடர்பாக அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தி அரசியற் சட்டத்தைத் திருத்த ஜனதிபதி நடவடிக்கை எடுத்துவருகிறார்.

சோஷலிஸக் கட்சியைச் சேர்ந்த மிட்ராண்ட் ஜனதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பிரான்ஸில் தேசியமயமாக்கல் கொள்கைகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (சூ)

## இத்தாலி அமைச்சர் ராஜினமா

[ரோமாபுரி]

இத்தாலியின் வரவுசெலவுத் திட்ட மந்திரி பதவியிலிருந்து ராஜினபா செய்துள்ளார்.

இவருக்கும் சர்வதேச சட்ட விரோத தாபனம் ஒன்றுக்கும் இடையில் இருந்த உறவுகள் வெளியானதைத் தொடர்ந்து இவர் மந்திரிப் பதவியிலிருந்து விலகியுள்ளார். ஆயினும் இத்தாலி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 5 கட்சி கூட்டணிகளில் ஒன்ருன சமுக ஜனநாயகக் கட்சியின் தலைவராக இவர் தொடர்ந்து இருப்பார் எனத் தெரிகிறது [சூ]

## அமெரிக்க உபஜனதிபதியாக பெண் வேட்பாளர் போட்டி

வாஷிங்டன், ஜூலை 13

அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் உப ஜனதிபதியாக போட்டியிடுவதற்கு ராஸ்டின் பெரேரோ என்ற பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயக கட்சியில் ஜனதிபதி தேர்தலில் போட்டியிடும் வால்டர் மொன்டேல் இதனை நேற்று அறிவித்தார்.

(7ம் பக்கமும் பார்க்க)


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான
மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்
உடனே நாடுங்கள்.

குறிப்பு:

கனடா செல்வதற்கான சகல ஏ
கொடுக்கப்படும்.

Cross Travel
Services (Pte) Lt
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No: 22040, 22065. TELEX No.



✶ தூய அலுமினியம் ✶ பிளாஸ்டிக்
✶ எவர் சில்வர் ✶ எனமல்
✶ கண்ணடி ✶ தாச்சிவகைகள்
✶ ஒக்கிட் (ORCHID) வாளிகள்

போன்ற பொருட்களும்,
மங்கள வைபவங்களுக்கு உகந்த
அன்பளிப்புப்பொருட்கள் யாவும்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும், மற்றும் எனமல், பிளாஸ்டிக் ஒக்கிட், வாளிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பினன்ஸ் சொகுசு பஸ் ஆசனங்கள் பதிவுசெய்துகொள்ளலாம்.

நியூ லங்கா
அலுமினியம் தொழிற்சாலை
(விற்பனைப் பிரிவு)

இல. 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

போன்: 23596

### மணிவாக்கு

இறைவன் அன்பரின் மனதில் கலந்திருப்பான்; அறிவில் கலந்திருப்பான்; அவர்களுடைய ஊனிலும் உயிரிலும் எலும்பிலும் கலந்திருப்பான்.

— வள்ளலார்

# நமதுநோக்கு

## நம்பிக்கை துளிர்க்குமா?

தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான சர்வ கட்சி மகாநாடு மீண்டும் அடுத்தவாரம் ஆரம்பமாகப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

இந்த மகாநாடு பற்றி ஆரம்பத்தில் இருந்த உற்சாமும், நம்பிக்கையும் இப்பொழுது சற்றுமே இல்லை.

இதுவெறும்கண்துடைப்பு, இழுத்தடிப்பு, நடைமுறையில் பூஜ்யம்தான் மிஞ்சும் என்ற அபிப்பிராயம் வலுவடைந்துள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்கள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திஅவர்களைச் சந்திக்கு முன்னர் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய பின்னரே தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணமுயும் என்ற கருத்தை வெளியிட்டு வந்தார். அந்தச் சந்திப்புக்குப் பின்னர் அதே கருத்தை அவர் இன்னமும் வலியுறுத்துகின்றாரா என்பது தெரியவில்லை. அவ்வாறாயின் சர்வகட்சி மகாநாட்டை அவர் மீண்டும் அழைப்பதில் அர்த்தமிருக்காது.

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளைத் திருப்பி அனுப்பும்படி அல்லது தம்மிடம் பிடித்துத் தரும்படி கோருவது இலங்கை அரசின் நிலைக்கு சரியாய் இருக்கலாம். ஆனால் இங்கு அரசியல்தீர்வொன்றுஉருவானால் மட்டுமே தீவிரவாதிகளைத் திருப்பியனுப்பக்கூடிய சூழ்நிலை உருவாகும் என இந்தியப் பிரதமர் கூறிவிட்டதாகக் கருதப்படுகிறது.

''தமிழர்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசாங்கம் கடந்தகால வரலாற்றையும், நாட்டின் எதிர்காலத்தையும் பரந்த அளவில் நோக்கிச் செயல்படுவதாகத் தெரியவில்லை'' என இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி சில தினங்களுக்குமுன் பத்திரிகை நிருபர் ஒருவருக்களித்த பேட்டியில் கூறியிருப்பது கவனத்திற்குரியது. அண்மையில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன அவர்களைச் சந்தித்த பிறகே இக்கருத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்கள் உற்சாகமளிப்பதாக இல்லையென்றும் அவர் கவலையடைந்துள்ளார்.

இதேசமயம் இங்குள்ள நிலைமையை வேறுவிதமாகத் திருப்பிவிட சில அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் பகீரத முயற்சியில் இறங்கியிருப்பதைக் காணமுடிகிறது.

இப்பிரச்னைக்கு உண்மையாகவே ஒரு தீர்வினை உருவாக்கி நாடு அமைதியடையவும், மீண்டும் வழமையான சூழ்நிலை உருவாகவும் வழிவகுக்க விரும்புகிறவர் எவராய் இருந்தாலும், சிக்கலுக்குள் புதிய சிக்கல்களைத் திணிக்க எத்தனிக்கமாட்டார்கள்.

சிக்கலை உடைத்து தமிழருக்கு நம்பிக்கை ஏற்பம் வகையில் ஒரு திருப்பத்தை உருவாக்கவேண்டியது அரசின் பொறுப்பு.

இல்லையெனில் மிக இலகுவாகத் தீர்த்துவைப்பதற்கான சந்தர்ப்பமும், சூழ்நிலையும் இருந்தும்கூட அதனைப் பயன்படுத்திக்கொள்ளாது நாட்டைப் படுகுழியில் தள்ளிவிட்ட 'பெருமை' இன்றைய ஆட்சியாளர்களைச் சேரும்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்லவிருந்ததையொட்டி தள்ளிவைக்கப்பட்ட சர்வ கட்சி மகாநாடு, அவர் அந்த நாடுகளில் எல்லாம், பகிரங்கமாகவும் இரகசியமாகவும்நடத்தியுள்ளபேச்சு வார்த்தைகளின் பின்னணியில் இப்பொழுது மீண்டும் கூடவிருப்பதால் புதிதாக ஏதும் நம்பிக்கையளிக்கும் சங்கதிகள், வெளிவரலாம் என்று எதிர்பார்ப்பது இயற்கை.

அது, புதிய மொந்தையில் பழைய கள்ளாகவோ அல்லது பழைய மொந்தையில் புதிய கள்ளாகவோ இருந்துவிடலாகாது என்பதே எமது விருப்பம்.

## வறட்டு வேதாந்தமல்ல!

''திக்கற்றவர்களுக்குத்தெய்வமேதுணை'' என்ற வசனம், தன்னைத் தான் சமாதானம் செய்து கொள்வதற்காக யாரோ ஒரு கையாலாகாத மனிதனால் உளறப்பட்ட வறட்டு வேதாந்தக் கருத்தென்று உதாசீனம்செய்ய முடியாது என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் அண்மையில் நிகழ்த்தியுள்ள ஒரு சொற்பொழிவில் தெளிவுபடுத்தியுள்ளார்.

வண்ணை கதிரேசன்கோவிலில் இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற கந்தபுராண உரை நூல் வெளியீட்டு விழாவில் பேசிய பேராசிரியர், ''திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை செய்கிறது என்பதையும், அத்தெய்வம் எந்த உருவிலும் எங்கிருந்து வருமென்பதனையும் அத்துணை வரும்வரை கொண்ட கொள்கையில் வழுவாது நிற்பவர்களே வெற்றியடைவார்கள் என்பதனையும் கந்தபுராணக் கதை உணர்த்துகின்றது'' என்று எடுத்துரைத்தார்.

நேர்மையும் நீதியும் வழுவாது தர்ம சிந்தையுடன் ஒரு குறிக்கோளுடன் செயற்பட்டுவரும் எவரும் தமது சொந்தவாழ்விலேயே தெய்வம் துணைநின்று உதவுவதை உணரமுடியும் என்பார்கள் அனுபவசாலிகள்.

தனிமனித வாழ்விலேயே இவ்வாறாயின் ஒரு சமுதாயமே திக்கற்ற நிலையில் தெய்வத்தை நம்பி நிற்பதாயின் நிச்சயமாக அந்தத் துணை கிடைத்தே தீரும். ஆனால் இதற்கு வழிகள், முறைகள், தியாகங்கள் என்று பல்வேறு சாதனைகள் தேவைப்படலாம்.

அரசியலில் அநாதைகளாயும், பொருளாதார, கலாசாரத் துறைகளில் உதவுவார் இன்றியும், என்ன நடக்குமோ, எங்குசென்று முடியுமோவென்ற ஏக்கத்துடனும்நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் இன்றைய தமிழர் சமுதாயத்தின் இதயங்களைத் திறப்பதற்கு பேராசிரியரின் கருத்து உதவவேண்டும்.

நாம் நீதியின்பால் நிற்போம்; நேர் வழியிற் செயற்படுவோம்; தெய்வம் நம்மோடு நின்று துணைபுரியும் என்று நம்புவோம்.

## இன்று பிரெஞ்சு தேசிய தினம்:

# பழமைப் பொலிவும் இளமை எழிலும் ததும்பும் பிரான்ஸ்

### மாவீரன் நெப்போலியனையும் பால்ஸாக், மாப்பசான், எமிலிசோலா, விக்டர் ஹியூகோ முதலான எழுத்தாளர்களையும் தந்த நாடு பிரான்ஸ்!

உலகில் புகழ்வாய்ந்த நாடுகளின் தேசிய தினங்களில் அந்நாடுகளின் வரலாறு, கலை, மொழி, இலக்கியம் போன்ற சிறப்புக்களைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதே. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக பிரான்ஸ் விளங்குகிறது. இந்நாடு இரு உலகமகா யுத்தங்களால் பாதிப்பு அடைந்த பொழுதிலும் விஞ்ஞான ரீதியாக மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வருகிறது.

இந்நாடு ஜூலை 14-ந் திகதியன்று தனது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. இத்தினம் வரலாற்று ரீதியாக 'பஸ்ரிலின்' வீழ்ச்சியைக் குறிக்கிறது. பிரான்ஸ் நாட்டின் அடிப்படை உயர் கருத்துக்களாக சுதந்திரம், சமத்துவம். சகோதரத்துவம் என்ற கோட்பாடுகள் போற்றப்படுகின்றன இந்நாடு எப்போதும் பழைமையும் இளமையும் கொண்டு மிளிர்வதாகச் சில எழுத்தாளர்கள் கூறுகிறார்கள். இந்நாட்டைச் சுற்றிப் பார்ப்பவர்கள், இந்நாட்டின் அழகில் மயங்குவதோடு கடந்தகால கலாசாரத்தின் எடுத்துக்காட்டாக விழங்கும் எழில் மிகு தேவாலயங்களையும்அரண்மனைகளையும், நவீன முறைகளில் அமைக்கப்பட்டுள்ள நெடுஞ் சாலைகளையும் கட்டடங்களையும் பார்த்துப் பழைமையும் இளமையும் ஒன்றிணைந்து காணப்படுவதைப் பாராட்டுகிறார்கள், பிரபலஆங்கில எழுத்தாளரான 'சோமசெற் மோகம்'', ஸ்பானிய புகழ் பெற்ற ஓவியரான'பிக்காசோ' போன்றவர்கள் பிரான்ஸில் வந்து பல வருடங்கள் வாழ்ந்தார்கள். இங்குள்ள 'சாம் எலிஸிஸ்' என்ற சாலை, உலகிலேயே சிறந்த சாலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. பிரபல ஆங்கில வரலாற்று எழுத்தாளரான 'மக்கோலே' இந்நாட்டின் பச்சை நிறமான கோதுமை வயல்களையும், கோடைத் திராட்சை இரசத்தையும் புகழ்ந்து எழுதியதில் வியப்பில்லை. பல கலைக்காட்சிக் கூடங்கள் நிறைந்த இந்நாட்டில் கோதிக் கட்டிடக் கலைக்குக் குறைவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது 'சாத்துறு' பேராலயமாகும்.

ஐரோப்பாவிலேயே இந்நாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பரிஸில் தும்மல் எற்பட்டால் ஐரோப்பா ஜலதோஷம் கண்டுவிடும்'' என்று கருதப்பட்டதும் உண்டு. பெயர்பெற்ற மாவீரன் நெப்போலியனும் இந்நாட்டைச் சேர்ந்தவனே. இந்நாட்டின் தலைநகரம் பரிஸ் இந்நகரத்தை உலகின் நாகரிகத்தின் சிகரமாகக் கணிக்கிறார்கள். இத்தேசத்தின் சிறந்த பல்கலைக்கழகமாக 'சொர். பொன்' விளங்குகிறது. வடபிரான்சிற்கும், தென் பிரான்சிற்கும் வேறுபாடுகள் பல உண்டு. மொழிபேசும் முறையிலும் வித்தியாசத்தை அவதானிக்கலாம். பொருளாதாரத்தில் வட பகுதி சிறத்தும் முன்னேற்றமுள்ளதாகவும்' தெற்கு வளத்தில் குறைந்தும் இருப்பதைக்காணலாம். தெற்கில்தான் பிரான்ஸ் தேசத்தவரின் குணவியல்பு குறிப்பாகத் தெரிகிறதாக சிலர் கூறுகிறார்கள்.

பிரான்சிய மொழி ஐரோப்பிய மொழிகளுள் சிறந்த மொழியாகும். இது இலத்தீன்

(8ம் பக்கம் பார்க்க)

ஆர். மனோரஞ்சிதன்

## சர்வகட்சி மாநாடு தாமதம்: பிரச்னைகளை வளர்க்கிறது!

இனப் பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு காண்பதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து இலங்கையின் வடபகுதியில் பயங்கரவாதம் பெரும் தொல்லையாக இருக்கிறதென்றும் உலகில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு உலக நாடுகள் முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

இதே சமயம் இலங்கையில் இனப் பிரச்னைக்குப் பேச்சு வார்த்தைகள் மூலம் நல்ல தீர்வு காணப்படவேண்டிய அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை டில்லியில் சந்திக்கும் போது தமிழ் நாட்டில் ஆயுதப் பயிற்சி பெறும் வடஇலங்கைப் பயங்கரவாதிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்போவதாக ஜனாதிபதி ஜே. ஆர். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கூறியிருந்தார்.

ஆனால் இந்தியப் பிரதமருடனை பேச்சுவார்த்தையில் இப்பிரச்னை எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தியவெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் கெழும்பிலிருந்து வெளிவரும் 'ஐலன்ட்' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் நிருபரின் ஒரு கேள்விக்கு அளித்த பதிலில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

''நாங்கள் பலதடவைகளிலும் விளங்கப்படுத்தியபடி இலங்கையின் இனப் பிரச்னைக்கு அமைதியான தீர்வுகாணப்படவேண்டுமென்பதே எமது விருப்பம் அது எந்த வகையிலாக இருந்தாலும் பயங்கரவாதத்தை நாம் கண்டிக்கிறோம். தமிழ்த் தீவிரவாதிகளுக்கு தென்னிந்தியாவில் அடைக்கலம் கொடுக்கவில்லையென்பதையும் அவர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்கப்படவில்லையென்பதையும் இலங்கைத் தலைவர்களுக்கு நாம் உறுதியாகத் தெரிவத்திருக்கிறோம். வன்செயல் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை.''

முக்கியமாகத் தமிழர்கள் நாற்பதாயிரம் பேர் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கிறார்களென்பது உண்மை இவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்லக்கூடிய சாத்தியமான சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்.

தீவிரவாதிகளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்ற விஷயம் சம்பந்தமாக இதுவரை அப்படி கோரிக்கை எமக்கு விடுக்கப்படவில்லை. இப்பிரச்னைசம்பந்தமாக எமது சட்டத்தின் கீழ் சில நடைமுறைகள் இருக்கின்றன.''

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த விளக்கத்தை அளித்ததுடன் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டவேண்டுமென்று இந்தியா எப்போதுமே கூறிவந்திருகிறது. என்றார்.

### மீண்டும் எப்போது மகாநாடு?

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். வெளிநாட்டுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்

(5ம் பக்கம் பார்க்க)

எஸ். எம். ஜி.

# லயன்ஸ்கழகபிரதிமாவட்ட ஆளுனராக சட்டத்தரணி அம்பிகைபாலன் தெரிவு

ஒரு சிறந்த சமூக சேவையாளரும், யாழ்ப்பாண வலய சமாதான நீதிபதியும் உத்தியோகப்பற்றற்ற நீதவானும் ஆகிய சட்டத்தரணி திரு. செல்லப்பா அம்பிகைபாலன் சர்வதேச லயன்ஸ் கழகங்களில் 306 மாவட்டத்தின் பிரதி மாவட்ட ஆளுனராகத் தெரிவுசெய்யப்பட்டமை லயன்ஸ் கழகத்தினரிடையே பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

சட்டத்தரணி அம்பிகைபாலன் சாவகச்சேரியில் லயன்ஸ் கழகத்தை ஆரம்பிப்பதில் முன்னேடியாக இருந்து கழகத்தின் ஆரம்ப செயலாளராக விளங்கி பின்னர் இயக்குநர்சபை உறுப்புனராகவும், துணைத்தலைவராகவும், தலைவராகவும் விளங்கி கழகத்தின் ஊடாக சாவகச்சேரியில் நிரந்தரமான பல சேவைத்திட்டங்களைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவராக இவர் செயலாற்றிய காலத்தில் வலுவிழந்தோர்களுக்காக ஒரு பிரமாண்டமான பொருட்காட்சியையும் கண்காட்சியையும் நடாத்தி கழகத்தின் செயல் திட்டத்திற்காக இரண்டு லட்சத்து ஐயாயிரம் ரூபாவை சுத்த லாபமாகப் பெற்று ஒரு நிரந்தரமான வலுவிழந்தோர் இல்லத்தையும் இளைஞர் பயிற்சி நிலையத்தையும், லயன்ஸ் காரியாலயத்தையும் கட்டி உருவாக்கியமை மறக்கமுடியாத தொன்றுகும்.

திரு. அம்பிகைபாலன் லயன்ஸ் தலைவராகக் கடமையாற்றியபோது ஒரு லியோர் கழகத்தையும் புதிதா சாவகச்சேரியில் ஆரம்பித்து வைத்ததோடு நூற்றுக்குமதிகமான நலன்புரியக்கூடிய சேவைத் திட்டங்களை ஆற்றியமையினுல் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பிரிவு மாவட்டத்தில் பணிபுரிந்த 65 தலைவர்களுக்கிடையில் தலைசிறந்த தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு அதற்கான விருது லயன்ஸ் கழக மகாநாட்டில் அவருக்கு மாவட்ட ஆளுனரால் வழங்கப்பட்டமை பெருமைப்படக்கூடியதொன்றுகும்.

லயன்ஸ் அம்பிகைபாலன் ஆற்றிய சேவையை மதித்து அவர் சென்ற ஆண்டு சாவகச்சேரியியிலிருந்து புத்தளம் வரையுள்ள எல்லா லயன்ஸ் கழகங்களுக்கும் பொறுப்பாக வலயத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். வலயத் தலைவராக இருந்த காலத்தில் அவர் செய்த சேவைகள் மதிக்கப்பட்டு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதிச் சேவையின் பாராட்டு விருதையும், இவ்வாண்டு நடைபெற்ற மகாநாட்டில் பெற்றுக்கொண்டார்.

இவரின் தன்னலமற்ற சேவையை மதித்து தற்போது இவர் சர்வதேச லயன்ஸ் கழக 606 பிரிவு மாவட்டத்தின் பிரதி மாவட்ட ஆளுனராகத் தெரிவுசெய்யப்பட்டு இவர் கௌரவிக்கப்பட்டமை சேவைநலம் பாராட்டும் லயன்ஸ் கழகங்கள் நலன் விரும்பிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை அழித்துள்ளது.



இதைவிட சட்டத்தரணி அம்பிகைபாலன் சாவகச்சேரி உவைஸ்மன் கழக ஆரம்ப கால அங்கத்தவராகவும், தென்மட்டுவில் சேரக்கேணி கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை உபதலைவராகவும், தென்மட்டுவில் கலைமகள் சனசமூக நிலைய போஷகராகவும், உலக இந்து மகா சபை தென்மராட்சிக்கிளை தலைவராகவும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தென்மராட்சி பிரஜைகள் குழுவின் தலைவராகவும், தெரிவு செய்யப்பட்டமை இவர் பொதுச் சேவையில் காட்டுகின்ற அக்கறையை தெளிவாக விளங்குகின்றது. இவருக்கு எமது நல்லாசிகளும் பாராட்டுகளும்.

லயன்ஸ்.
கே. சிவஞானசுந்தரம்,

## பரு. லயன்ஸ் நடத்தும் சிகிச்சை நிலையம்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை லயன்ஸ்கழக உறுப்பினரால் மணல்காட்டில் ஒரு பொது சிகிச்சை நிலையம் 15ம் திகதியன்று நடாத்தப்படவுள்ளது. இக் கழகத் தலைவர் டாக்டர் எம். கே. முருகாநந்தனின் தலைமையில் பல டாக்டர்கள் இச் சிகிச்சை நிலையத்தில் பங்கு பற்றுகிருர்கள். இத்துடன் கால்நடை வைத்திய நிலையமும் இதே நிலையத்தில் நடைபெறவுள்ளது இதற்கான ஏற்பாட்டினைடாக்டர் ரி.கதிர வேற்பிள்ளை கவனித்து வருகிருர்

இதே போன்ற சிகிச்சை நிலையங்கள் பல இடங்களில் நடாத்த பருத்தித்துறை லயன்ஸ்கழகம்திட்டமிட்டுள்ளதென லயன் பேராசிரியர் வி. கே.கணேசலிங்கம் தெரிவித்தார்.

## நாளை நினைவுதினம்

# புகழ் விரும்பாத ஆசிரியர்

திறமை, பண்பு, அடக்கம் மூன்றும் ஒருங்கமைந்த ஆசிரியர்களைக் காண்பது மிக அரிது. இம்மூன்று இலக்கணங்களும் ஒருங்கமைந்த ஆசிரியர்கள் பலர் தம்மை வெளியிற் காட்டிக்கொள்ள விரும்பாமல் தம் கடமையைச் சரிவரச் செய்து மாணவர்களுக்கு பெரும் பயனுடையவர்களாய் திகழ்ந்திருக்கிருர்கள். மாணவர் உலகம் அவர்களை என்றும் மறக்கமாட்டாது. இத்தகைய ஆசிரியர்களில் தலைசிறந்த ஒருவர் கோபால பிள்ளை ஆசிரியர் ஆவர்.

அவர் ஐம்பது வருடங்களின் முன் மிக இளமைப் பருவத்திலேயே ஆசிரியர் பணியை ஏற்ருர். அதுவும் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலேயே அப்பணியை ஆரம்பித்தார் தமது சேவையின் பெரும் பாகத்தை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலேயே ஆற்றினுர். அவரது தமிழ் இலக்கண இலக்கிய ஆற்றலும், கணிதத்திறமையும் அவரிடம் கற்ற மாணவர்களுக்கு நன்கு விளங்கும். பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் மரபு தவருது பேசுவார், எழுதுவார், எவரிடமுங் குழந்தைகள் போலப் பழகுவார். கோபம் என்பது அவரிடத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் காண முடியாதது, மாணவர்களுக்கு அவரிடத்தில் அன்பைத் தவிர அச்சமேற்படுவதில்லை.

கோபாலபிள்ளை ஆசிரியர் கற்பிப்பதில் தனித்திறமை வாய்ந்தவர். மாணவர்களின் உளப்போக்கைத் தெரிந்து அவர்களுக்கேற்றவாறு தாம் கற்பிக்கும் முறைகளை மாற்றிக்கொள்வார். எப்பொழுதும் அவரிடம் கற்கும் மாணவர்கள் முன்னணியிலேயே திகழ்வார்கள், அதனுல் அவருடைய வகுப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் பெற்ருர்கள் விரும்புவர்.

அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்கமும் பண்பும் நிறைந்திருந்தன. அடக்கமான சைவப் பண்புடன் கூடிய வாழ்க்கையை அவர் நடத்தினுர். அவருக்குப் பகைவர் கிடையாது யாவரும் நண்பர்களாவேயிருந்தனர். ஏறக்குறைய முப்பத்தைந்து வருடம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தொண்டாற்றி பல்லாயிரம் மாணவர்களுக்கு கல்வி புகட்டியபோதும் தன்னைப் பிறர் போற்றவேண்டும் என்பதற்காக அவர் எதையும் செய்ததில்லை. யாருடைய பிரதியுபகாரத்தையும் எதிர் பார்த்ததில்லை.

கோபாலபிள்ளை ஆசிரியர் தமது சேவையின் இறுதிக் காலத்தில் தமது பிறப்பிடமாகிய மட்டுவிலில் வசித்து பிள்ளைகளுடன் மகிழ்ந்திருந்து இறைவனடியெய்தினுர். அவருக்கு எமது நன்றிகலந்த அஞ்சலியைச் செலுத்துகிருேம்.

வைத்தீஸ்வர வித்தியாலய
பழையமாணவர் மன்றம்,

# "ஆத்மீக ஆயுதங்களை நாம் சேகரிக்க வேண்டும்!"

## பஜனைப் பாதயாத்திரையில் உரை!

(மட்டுவில்)

"ஏவுகணைகளையும், பயங்கர அணு-ஆயுதங்களையுமே வல்லரசு நாடுகள், தமது நாட்டின் பாதுகாப்பிற்காகச் சேகரித்துப் பாதுகாக்கும் இன்றைய காலகட்டத்திலே, இலங்கை போன்ற சிறிய நாடுகளில், தெய்வீகம், ஞானம், இறை பக்திபோன்ற ஆத்மீக ஆயுதங்களையே நாம் சேகரிக்கவேண்டும். அணுஆயுதங்கள் அழிவுகளை மட்டுமே செய்யும். ஆக்கத்தைக் கொடுக்கமுடியாதவை, ஆனுல் எமது தெய்வீக நம்பிக்கையும் ஆத்மீக சக்தியும் தீயசக்திகளை அழித்து நாட்டின் ஆக்கத்தையும் சமுதாயத்திற்குச் செல்வத்தையும், வளத்தையும், அறத்தையும் கொடுத்துப் புனிதமாக்கும். இதில் சந்தேகமில்லை" என்று ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா கூறினுர்.

தென்மராட்சி சைவமகா சபை கிராமங்கள் தோறும் தொண்டர்கள் சகிதம் இறை பஜனைப் பாதயாத்திரையை நடாத்திவருகின்றது.

இந்தப் பஜனைக் கோஷ்டி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நிகழ்த்திய ஆத்மீக உபந்நியாசத்தின்போதே திரு. முத்தையா மேற்கண்டவாறு கூறினுர். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"இன்று அரசாங்கமே கிராமங்களின் நலனுக்காக. கிராம எழுச்சித்திட்டங்கள்மூலம் பல பயனுள்ள செயல்களைச்செய்து வருகிறது. இந்த அடிப்படையிலே, சைவமக்களாகிய நாம், நமது கிராமிய சமுதாய ஈடேற்றத்திற்கு எம்மாலான பங்களிப்பைச் செய்யவேண்டியது அவசியம். இன்று அச்சம், பீதி அமைதியற்ற பயங்கரச் சூழ்நிலையிலேயே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள் இந்நிலையில் அவர்களுக்கு ஆத்மீக ஈடேற்றமே அவசியம் தேவை" என்றும் அவர் சொன்னுர். சபைத் தலைவர் திரு. சி. விநாசித்தம்பி, செயலாளர் திரு. செ. கைலாயபிள்ளை உட்பட பலர் உரை நிகழ்த்தினர். விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை உப-தலைவர் திரு.வ. குழந்தைவேலு, தொண்டர்களை வரவேற்று தாகசாந்தி செய்வித்து உபசரித்தனுப்பினுர். [கி]

## கட்டாயலீவில் அனுப்பப்பட்டார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய வே. மயில்வாகனம், சங்க நிர்வாகத்தினுல் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் இவரின் இடத்துக்கு சங்க ஊழியரான திரு.கே. வல்லிபுரம் பதில் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (கி)

# யாழ். பல்கலைக்கழகத்தின் முதற் கலாநிதி மௌனகுரு!

இன்று யாழ் பல்கலைக் ழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் திரு. தி. மௌனகுரு கலாநிதிப்பட்டம் பெறுகிருர். மட்டக்களப்பில் மரபுவழி நாடகங்கள் பற்றிய இவரது ஆராய்ச்சிக்கே இக் கலாநிதிப்பட்டம் வழங்கப்படுகிறது. யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முதலாவது கலாநிதி என்ற தகைமையை பெறும் மௌனகுரு காலம் சென்ற பேராசிரியர் கைலாசபதியின் வழிகாட்டலின்கீழ் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆய்வை மேற்கொண்ட ஒரேயொரு மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத் துறையின் விரிவுரையாளராகத் தற்போது பணிபுரியும் மௌனகுரு இதற்கு முன் கல்முனை சாஹிருக் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியரகாவும், கொழும்பு பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் பாடநூல் எழுத்தாளராகவும், பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும் கடமைபுரிந்துள்ளார்.

மௌனகுரு ஏற்கனவே எம் ஏ. கல்வி டிப்ளோமா ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பியதும் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் புதிய ஆர்வத்துடன் ஈடுபடுவாரெனவே பொதுவாக உள்நாட்டிலும் உலகநாடுகளிலும் திர்பார்க்கப்பட்டது.

விரைவில் வட்டமேசை மகாநாடு கூட்டப்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

வட்டமேசை மகாநாடு கூட்டப்படுவதுபற்றியோ இனப்பிரச்னைக்குச் சுமுகமான நிரந்தரத் தீர்வுகாண்பதுபற்றியோ அரசதரப்பில் யாரும் அதிகம் பேசுவதாகக்காணேம்.

தேசியபந்தோபஸ்து அமைச்சர் வடபகுதியில் சீரான நிலைமை தோன்றினுல்தான் இனப்பிரச்னைக்குச் சுமுகமான தீர்வைக் காணமுடியும் என்று கூறியிருக்கிருர்.

"தனிப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டுவந்த பயங்கரவாதிகள் தற்போது பரந்த அடிப்படையில் தாக்குதலை நடத்த ஆரம்பித்துவிட்டனர், இதனைத்தடுக்க நாம் மாற்று நடவடிக்கை காணவேண்டியது அவசியமாகிறது', என்றும் அமைச்சர் லலித் கூறியிருக்கிருர்.

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பயங்கரவாதம் பரவத் தொடங்கியிருக்கிறதென்று ஜனுதிபதி தெரிவித்திருக்கிருர்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டியபின்னர்தான் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணமுடியுமென நினைத்தால் பயங்கரவாதமும் ஒழியாது பிரச்னைகளும் தீராது.

இனப்பிரச்னை தேசியப் பிரச்னை இதற்குத் தேசியமட்டத்தில் மிகவிரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

ஒருபகுதி மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரவையும் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ருேகண விஜேவீரவையும் ஒதுக்கி வைப்பதாலோ அக்கட்சிகளைத் தடைசெய்து வைப்பதாலோ இந்நாட்டின் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா?

ஆடிக்கலவரம் வந்து ஆண்டொன்ருகிவிட்டபின்னரும், இனப்பிரச்னைக்கு இன்னமும் ஒரு நல்ல தீர்வு காணமுடியவில்லையென்ருல் பிரச்னை மேலும் மேலும் சிக்கலாகவே வழிவகுக்கும்.

தேசியப் பிரச்னைக்கு வெளிநாட்டு இந்நாணுவ ஆலோசனைகளோ உதவிகளோ நல்லதீர்வைத் தரமுடியாது. இந்த முயற்சி சர்வதேசப் பயங்கரவாதத்தை இலங்கையில் வேர் ஊன்றச்செய்யவே பாதை வகுத்துவிடும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இராசவீதியில் புதிய வீடமைப்புத் திட்ட வேலைகள் இன்று ஆரம்பமாகின்றன. (ப)

## யாருடையது

திரு. கமலேந்திரன் பொன் கோவன் என்பவரின் அடையாள அட்டையை திரு. ந. ரவிக்குமார் என்பவரும் காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு ஜெயரத்தினம் சின்னத்தம்பி என்பவரின் அடையாள அட்டையை ஒரு அன்பரும், திரு கே. பாலநந்தன் என்பவரின் துறைமுக அடையாள அட்டையையும், பேர்ஸினையும் ஏழாலையைச் சேர்ந்த திரு ரி. பாலசிங்கம் என்பவரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில்ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## வெள்ளப்பெருக்கு

(கொழும்பு)

இரத்தினபுரி, அவிசாவளை, கினிரதென ஆகிய பகுதிகளில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதினுல் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

ஹட்டன் பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. (சூ)

## போதைவஸ்து பாவிப்புக்கு மரண தண்டனை

லண்டன் ஜூலை 13

பாரெயினில் போதைவஸ்துகளை பாவிப்போர், ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் ஆகியோருக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இப் பிராந்தியத்தில் அதிகரித்த போதை வஸ்து பாவிப்பைத் தொடர்ந்து பாரெய்ன் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. [சூ]

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 30 (14-07-1984)
வாரம்: சனி
திதி: பிரதமை காலை 8-39ன் மேல் துதியை
நக்ஷத்திரம்: உத்தராடம் காலை8-37ன்மேல் திருவோணம்

மேடம்: சிறு விடயங்கள்கூட அதிக ஆத்திரத்தைத்தரலாம், வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும், உங்களைச் சிந்திக்க வைப்பதற்காகச் சூழ்ச்சி வலை விரிக்கப்படும், சிந்தித்தபின் செயலாற்றவும்.

இடபம்: பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள், இதன் மூலம் பணமும் செலவாகும், அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

மிதுனம்: உறவு முறைகளில் பிளவுதென்படும், மனதில்உற்சாகம்குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கடகம்: வாழ்வில் இன்று வெற்றித் திருநாளாகும், எதிலும் நஷ்டம் உங்கள்பக்கமே இருக்கும், புதிய பொருட்கள் கொள்வனவுசெய்வதற்கு நன்று.

சிங்கம்: எப்பக்கம் திரும்பினாலும்ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படலாம், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்கு இருக்கும்.

கன்னி: பகைமூட்டம் தோன்றும், முன்னேற்றம் தடைப்படும், எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும், உடல்நலத்தைப்பேணி நடக்கவும்.

துலாம்: பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்னைகளில் சுமுகமானநிலை தென்படும், சுற்றாடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

விருச்சிகம்; கொடுக்கல்வாங்கல்மூலம் அபிப்பிராயபேதம் ஏற்படும், நண்பர் ஒருவர்உம்மைத் தவறான பாதையில் இழுத்துச்செல்வார், மௌனம் நன்மை தரும்.

தனுசு: மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கலாம், முன்னேற்றமான தினம்.

மகரம்; தொழில்துறையில் புதியவெற்றி கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்கு இலக்காவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணமும் மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், விருந்துபசாரங்களும் உண்டு, சிலருக்கு வாகன லாபமும் உண்டு.

மீனம்: அவசரம் வேண்டாம் ஆயுதபீடைக்கும் இடமுண்டு, நில், நிதானி, அமைதி உன் காலடியில், உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீ ராகவேந்திர சுப்பிரபாதம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கிறிஸ்தவ நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
6-55 போதிமகாதவனின் போதனைகள்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச் செய்திகள்
7-30 இசையமுதம்
8-15 முஸ்லீம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக்கச்சேரி-M. இராஜசிங்கம்
9-15 தமிழ் மூலம் சிங்களம்
9-30 நாட்டுப்பாடல்
9-45 தகவல்- s. g. n புஸ்பரத்தினம்
10-00 சங்கமம்
10-30 கதைப்பாட்டு "அன்னை சொல்லை அமிர்தம்" ஜயந்தி சுப்பிரமணியம்
10-45 அகில இந்திய வானொலி ஒலிபரப்பு
11-30 மாணிக்கமாலை
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக் களஞ்சியம்
6-30 விசேட நிகழ்ச்சி பிரான்ஸ் தேசிய தினம்
6-45 லயவின்யாசம் T. பாக்கியநாதன்
7-00 நாட்டுக்கூத்து
7-30 உலகச் செய்திகள்
7-40 மெல்லிசைத் தேர்வு எம். பாக்கியராசா
7-45 செய்திச்சுருள்
8-00 முஸ்லீம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப்பாடல்
9-30 நாடகம் "ஓர் ஆத்மா அழுகிறது-இந்துமகேசன்
10-30 ஒலிபரப்பு முடிவு

## சாரணர் சிலை திருத்தப்பட்டது

(வேலணை)

யாழ்.செயலகத்திற்கு அருகாமையில் சிதைந்த நிலையில் காட்சியளித்துக்கொண்டிருந்த 'சாரணர்' சிலையை யாழ்.மாநகரசபை ஆணையாளர் திரு. சி.வி.கே.சிவஞானம் திருத்தி அமைத்துக் கொடுத்ததுடன், அச்சிலையை திறந்தும் வைத்தார்.

சாரணரின்50வதுவருடத்தை ஞாபகப் படுத்தும் வகையில் இச் சிலை நிறுவப்பட்டது.இச் சிலையை திருத்தம் செய்து தருமாறு யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.செ.வரதலிங்கம் யாழ்.மாநகரசபை ஆணையாளரை கேட்டிருந்தார். (கி)


# உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு



ஏஸ்-லோன் வீடு கட்டு வோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு...

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட் கொருமுறைநாம் தரும் பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி. வீ. சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது;

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சீட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சீட்டையும் உறுதிச்சீட்டையும் கீழ்க்கண்டகூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம்.
நீங்கள் அதிர்ஷ்டசாலியானால் உங்கள் உறுதிச்சீட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன்மூலம் எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுகிறீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/முதல் ரூ15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வன விற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் 5000/-.

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்;

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ____________
முகவரி ____________
கட்டிடத்தலத்தின்அமைவிடம் ____________
குழாய்த்தொழிலாளரின் பெயர் ____________
வியாபாரியின் பெயர் ____________
முகவரி ____________

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ________ கையொப்பம் ____________
இன்று பி.வி சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லொன்.
ஏன்? ____________

S-lon
நிகர் வேறில்லை

விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

உற்பத்தியாளர்க்ள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

கடைசி நாள் 15ஒகத்து 1984
விற்பனை அலுவலகங்கள்.
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

GARADS

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
முத்துராமன்-ஜெயந்தி
**ஷண்முகப்பிரியா**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES HOLLYWOOD
(Strictly for Adults)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45,7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
13 முதல் 15 வரை
சிவாஜி-மஞ்சுளா
**எங்க தங்க ராஜா**

**ரீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
**மன்மதலீலை**
[புத்தம் புதிய
வண்ணப் பிரதி]

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-15
ஊர்வசி சாரதாவின்
நடிப்பில்
**துலாபாரம்**
(மலையாளம் புதிய பிரதி)
தன் குடும்பத்தில் ஏற்பட்ட சோகத்தால் குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்தும் பரிதாபமான முடிவு ஏன்?. .எதற்கு?

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**பொம்மலாட்டம்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30,2-30, 6-30,
ஜெமினி நடித்த
பாலசந்தரின்
**நான் அவனில்லை**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
யாழ். சினிமா இரசிகப் பெருமக்கள் இதுவரையும் கண்டுகளித்திராத அற்புதத் திரைவிருந்து! நிமிடத்துக்கு நிமிடம் திகிலும் மர்மமும் நிறைந்த வியப்பான திரைவிருந்து! எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)


யாழ். மாவட்ட பாடசாலைகள்

# மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ் இந்து மகளிர் சாதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி பல்வேறுபட்ட பந்தயங்களிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியுள்ளது. விபரம் வருமாறு:

19 வயதுக்குட்பட்டோர் க.சிவானந்தகுமாரி: நீளம் பாய்தல் முதலாமிடம். 200 மீட்டர் ஓட்டம்முதலாமிடம் 100 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம், ப சறுதனி; 100 மீட்டர் ஓட்டம் முதலாமிடம் 200 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம்' சோ.வாசுகி:குண்டெறிதல் முதலாமிடம், தட்டெறிதல் முதலாமிடம்.

17 வயதுக்குட்பட்டோர்- மு.திருவருட் செல்வி: நீளம் பாய்தலில் முதலாமிடம், த. சுபாஷினி: 100 மீற்றர் ஓட்டம் முதலாமிடம், 200 மீற்றர் ஓட்டம் முதலாமிடம், உயரம் பாய்தல் இரண்டாமிடம். கு. வாசுகி: குண்டெறிதல் முதலாமிடம், மு.தயாநிதி: தட்டெறிதல் முதலாமிடம.

15 வயதுக்குட்பட்டோர்- அ.உமா: 100 மீட்டர் ஓட்டம் முதலாமிடம், 200 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம் ச. துஷ்யந்தி: நீளம் பாய்தல் இரண்டாமிடம், க.பிரேமஜோதி: குண்டெறிதல் முதலாமிடம்.

அஞ்சல் ஓட்டம் 15 வயதுக்குட்பட்டவர் 4x100, 19வயதுக்குட்பட்வர், 4x200' ஆகிய வற்றிலும் முதலாமிடங்கள் பெறப்பட்டுள்ளது. (கி)

## கொக்குவில் இந்து வெற்றி

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும்காரைநகர்கலாநிதிநியாகராசா மகாவித்தியாலய பதினெட்டு வயதிற்கு உட்பட்டகளிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3-0 என்றகோல்களால் வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் கல்லூரிக்கும் இடையே நடைபெற இருந்த மேற்படி குழுவுக்கான போட்டியில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பங்குபற்றாமையினாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. (கி)


## 5-ம் வருட நினைவஞ்சலி

**அமரர் திரு. க. விஸ்வசோதிரத்தினம்**
**(இன்பம்)**

மலர்வு: 30-3-1952 உதிர்வு: 14-7-1979



தமிழ் தந்த இன்பமே, தனிப் பெருஞ் சிங்கமே, தமிழீழத் தாய் பெற்ற மாவிஸ்வ சோதியே மறந்துன்னை வாழ்வதா. இறந்தும் நீ வாழ்கின்றாய் எங்களின் நெஞ்சிலே.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

நவாலி தெற்கு, மானிப்பாய். (835)


நல்லூர் உ.அ.பி.வலைபந்தாட்ட அணி

# அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடம்!

(கோண்டாவில்)

விளையாட்டு அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியில் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பெண்கள் வலைபந்தாட்ட அணி அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இவ் அணியினர் யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் அகில இலங்கை யான போட்டியில் பங்கு கொள்ளத் தகுதிபெற்றன.

அகில இலங்கைரீதியிலான போட்டிகளில் நுவரெலியா மாவட்டக் குழுவினருடனான போட்டியிலேயே 42-17 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்று இவ் அணியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

மற்றும் கேகாலை மாவட்ட அணியை 42-20 புள்ளிகளாலும் மாத்தளை மாவட்ட அணியை 48-36 புள்ளிகளாலும் குருநாகல் அணியை 31-30புள்ளிகளாலும் வெற்றி பெற்றனர்.

கொழும்பு மாவட்டத்துடனான போட்டியிலேயே 43-24 புள்ளி என்ற அடிப்படையில் இவ் அணி தோல்வி அடைந்தது. (கி)

# "பெண்களை யந்திரமாக்க இப்போதும் முயற்சி!"

## — யோகா பாலச்சந்திரன்

[யாழ்ப்பாணம்]

''ஆண்களோடு சமானமாகக் கரம்கொடுத்துச் சாதனைசெய்யும் பெண்களை யந்திரங்களாக்கிவிட இன்னமும் முயற்சி செய்யப்படுகின்றது. இதனை வேரோடுகளைந்து விழிப்பும், மறுமலர்ச்சியும் கொண்டபெண்சமூகத்தைஉருவாக்க நாம் உழைப்பது அவசியமாகின்றது.

இவ்வாறு கொற்றாவத்தை குடும்பநலசேவைஅறிவுறுத்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய திருமதி யோகா பாலச்சந்திரன் குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து பேசும்போது பெண்கள் பொருளாதார வளத்தை வளம்படுத்துபவர்களாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். குடும்பநலத்தோடு சமுதாயநலனிலும் அக்கறையோடு உழைக்கவேண்டும். தாம் ஈன்ற செல்வங்களாம் பிள்ளைகளின் எதிர்கால நலனை மனதில் கொண்டு பிள்ளைகளை வளர்க்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார். கருத்தரங்கில் திரு. பூவேந்திரன், பேராசிரியர் கே. கணேசலிங்கம், திருமதி நேசையா ஆகியோரும் சிறப்புரை வழங்கினர்.

காஷ்மீர் அமைச்சரவைக் கலைப்பு:

# கண்டிக்கும் மகஜர் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

புதுடில்லி ஜுலை 13

ஜம்மு—காஷ்மீர் முதலமைச்சர் ஜனாப் பாருக் அப்துல்லா மந்திரிசபையைக் கலைத்தமையைக் கண்டிக்கும் மகஜர் ஒன்றை நான்கு எதிர்க்கட்சி முதலமைச்சர்களும் 19 எதிர்கட்சித் தலைவர்களும் நேற்று ஜனாதிபதி ஜெயில் சிங்கிடம் கையளித்துள்ளனர்.

இந்த மகஜரில் ''பாருக் அப்துல்லா மந்திரிசபையைக் கலைத்துப் புதிய அமைச்சரவை ஒன்றை அங்கு அமைக்க அனுமதியளித்தது தவறானதுஎன்று இந்த மாநிலத்தில் உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப் படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இதேவேளை காஷ்மீரின் தற்போதைய அமைச்சரவை ஒருமாதத்துக்குள் தமது நம்பிக்கைப் பலத்தைச் சட்டசபையில் நிரூபிக்கும் என்றும் புதிய துணை முதலமைச்சர் பி. ஜி. தாக்கூர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் ''பாருக் அப்துல்லா மந்திரிசபை மத்திய அரசுக்கும் நாட்டின் தேசியத்துக்கும் எதிரான ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். (சூ)

## காமராஜர் மாவட்டம்

[சென்னை]

தமிழ் நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாக பிரிகிறது.

பெருந் தலைவர் காமராஜர் பெயரைக் கொண்ட காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவையே மூன்றுமாவட்டங்களுமாகும்.

காமராஜர் மாவட்டம் அவரது சொந்த ஊரான விருதுநகரை தலைநகராக கொண்டு அமைக்கப்படுகிறது. [சூ]

## அமெரிக்க...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நியுயோர்க் மாநிலத்தைச் சேர்ந்த இந்த பெண்மணி 48 வயது நிறைந்தவர் இவர் தற்போது அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் ஒரு பெண்மணி உபஜனாதிபதியாக தேர்தலில் போட்டியிடுவது இதுவே முதல் தடவையாகும். [சூ]


குறோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

# சீட்டுப் பிடித்த பணத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சையில் இறந்தவரின் தாயாரான எஸ். கமலாம்பாள் (வயது 40) தெரிவித்தார்.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் கே பி எஸ். வரதராசா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

தாயார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

''இறந்தவர் எனது மூத்த மகன். மோட்டார் சைக்கிள் வேண்டுமென்று கேட்டார். அதற்கு சீட்டுப் பிடித்த காசு நாலாயிரம் ரூபா கொடுத்தேன் கடந்த 10ம் திகதி 3மணிக்கு வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு புறப்பட்டவரைப் பின் காணவில்லை.

''12ம் திகதி காலை 7மணிக்கு எனது கணவர் வீட்டுக்குவந்து மகன் இரத்தக் காயத்துடன் வெலிங்டன் சந்தியில் இறந்து கிடப்பதாகவும், மோட்டார் சைக்கிள் அருகில் கிடப்பதாகவும், சொன்னார்.

நேற்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து எனது மகன் என சடலத்தை அடையாளம் காட்டினேன்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதவான் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

சட்டவைத்திய அதிகாரி எஸ் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

யாழ். பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

பிரேத பரிசோதனையின் பின தந்தையாரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர், கல்வியன்காடு எரிபொருள் நிலையத்தில் 3ஆயிரம் ரூபாகப்பம் கேட்டது சம்பந்தமாக யாழ். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதும், பல வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்டதும் மரண விசாரணையின்போது பொலிசாரால் தெரிவிக்கப்பட்டன. (மா)

# பழமைப் பொலி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியிலிருந்து தோன்றியதாகவும் கருத்துத்தெளிவும், கலையழகும் கொண்டுள்ளதாக 'மத்றின்டொண்டோ' என்ற பிரான்சிய மொழி ஆசிரியர் கூறுகிறார். உலகிற்கு பல பிரசித்திபெற்ற கவிஞர்களையும், நாடக ஆசிரியர்களையும், எழுத்தாளர்களையும், தத்துவ ஆசிரியர்களையும்தந்தபெருமை இந் நாட்டிற்குண்டு. 'விக்டர் யூகோ', 'மொலியர்', 'லாபொண்டெயின்', 'பால்சாக்', 'எமிலிசோலா', 'மாபசான்' போன்றவர்கள் ஈண்டு குறிப்பிடதக்கவர்கள். 'விக்டர் சியூகேவின்' ''ஏழைபடும்பாடு'' (Les Miserables)என்ற நாவலை இலகுவில் மறந்துவிட முடியாது. எமிலி சோலாவின் 'நாஜுவையும்' மாபசானின் உள்ளத்தைத் தொடும் உணர்வுள்ள சிறுகதைகளையும் படிக்காதவர்கள் வெகுசிலரே.

அறிஞர் தனிநாயகம் அடிகளார் தமது 'ஒன்றே உலகம்' என்ற நூலில், பிரான்சிஸ் U.N.E.S.C.O ஸ்தாபனத்தின் தலைமையகம் இருப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது என்று எழுதியிருந்தார். ஏனெனில் இந்நாடு கலைகள் செறிந்துள்ளதென்பதற்காகவே அப்படிக் குறிப்பிட்டார். உலகப் பிரசித்திபெற்ற 'லாமார்செலேஸ் என்ற பிரான்சிய தேசிய கீதம் மகாகவி பாரதியாரையே கவர்ந்தது. அவர் அடிக்கடி இப்பாடலைப் பாடுவாராம் பிரான்சிய நட்புறவுச் சங்கம் (Alliance Franzaise) பிரான்சிய மொழியைப் பயிற்றுவிப்பதற்கும், இலங்கை, பிரான்ஸ் கலாச்சாரத் தொடர்பை வளர்ப்பதற்கும், உதவி வருகிறது இச்சங்கங்கள் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அமைந்துள்ள பிரெஞ்சு தேசிய தினம் சங்கங்களுக்கும் ஒரு முக்கிய நாளாகும்.

# 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

5ம் வகுப்பு புலமைப்பரிசில் பெறுவதற்கான பரீட்சை இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இலங்கைபூராவும் இப் பரீட்சை இன்று நடைபெறுகிறது.

தமிழ் மாணவர்களுக்கு தமிழ், கணிதம் ஆகிய இரு பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

இப்புலமைப்பரிசிலில் சித்தியடையும் வசதி குறைந்த மாணவர்களுக்கு தொடர்ந்து கல்விபயில மானியமும், வசதி படைத்த மாணவர்களுக்கு விரும்பிய கல்லூரியில் தொடர்ந்து கல்விபயில வசதியும் செய்து கொடுக்கப்படும், (மா]

# 2 நைஜீரியர் நாடுகடத்தல்

பிரிட்டன், ஜூலை 13

நைஜீரியாவின் முன்னாள் அமைச்சர் டிகோவை பிரிட்டனில் கடத்த முயற்சிக்கப்பட்டது தொடர்பாக பிரிட்டன் இரண்டு நைஜீரிய இராஜதந்திரிகளை நாடு கடத்தியுள்ளது.

இதற்குப் பதில் நடவடிக்கையாக நைஜீரியாவும் இரண்டு பிரிட்டிஷ் இராஜதந்திரிகளை நாடு கடத்தியுள்ளது. (சூ)

# இடம்பெயர்ந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. இவ்வாறான பல கோரிக்கைகளை வென்றெடுத்ததற்கு வேறெந்த ஆசிரியர் சங்கமும் உரிமை கோர இயலாது

''இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1984 மார்ச் முற்பகுதியில் ஏறக்குறைய 450 ஆசிரியர்களைத் தமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யக் கல்வி அமைச்சர் இணங்கி அதற்கான உத்தரவை பிறப்பித்தார். இவ்விடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காகக் கல்விச் சேவைக்குழு நடவடிக்கை மேற்கொண்ட அதே சமயத்தில், இலங்கை வரலாற்றில் என்றுமே இல்லாத வகையில் இடமாற்றம் பெறுவதற்குத் தகைமை பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலைஇலங்கையின் தேசிய நாளிதழ்களில் வெளியிட்டது. இக்கட்டத்திலேதான் வேறு தலையீடுகளால் இடமாற்றங்கள் தடுகப்பட்டனர்.

''இந்தவிதமான இடையூறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு ஏனைய ஆசிரியர் சங்கங்களுடனும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எப்போதும் ஆயத்தமாகவே உள்ளது

''இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த காலத்தில் எந்தவோர் ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியதாக நடந்துகொண்டதும் இல்லை எதிர்காலத்தில் அவ்வாறு நடக்கப்போவதுமில்லை. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முழுநோக்கமும் தமிழ் ஆசிரியர்களின் நலவுரிமைகளைப் பேணுவதும் பாதுகாப்பதும் மேலும் வசதிகளை ஆக்குவதுமேயாகும். இந்த அடிப்படைக் கொள்கைகளில் நின்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எக்கட்டத்திலேனும் பிறழ மாட்டாது.

'இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நியாயமான கொள்கைகளாலும் நடவடிக்கைகளாலும் காலம் சிறிது கடந்தாலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் பொருத்தமான தீர்வுகிடைக்கும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம்' என்றார். (வெ)

# இந்திய ஜனாதிபதி சென்னை விஜயம்

(சென்னை)

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் இன்று சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

# இன்று ஆரம்பமாகும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே, 'யாழ் உதைபநதாட்ட லீக்'கினால் வருடாந்தம் நடாத்தப்படும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

யாழ். மாவட்டத்திலிருந்து மொத்தம் 13 விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன. இன்றைய மோதலில், வைக்கிங்ஸ் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம் மோதும். நாளைய மோதலில் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் கழகம் மோதும்.

இப்போட்டிகள் அனைத்தும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறும். (வி)

# சட்டவிரோத மின் பாவனை: புத்திமதி கூறுவதுடன் எமக்கு தகவல் தரவேண்டும் யாழ். ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எவர் கேட்குமிடத்தும் கூடுமான வரையில் துரிதப்படுத்தி சட்டபூர்வமானமின்சாரத்தை வழங்குகின்றோம். அப்படியிருந்தும்கூட பலஇடங்களில் சட்டவிரோமாக பலர் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். பொலிசாரின் உதவியுடன் இவர்கட்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நடைமுறையைத் தவிர்க்கவே மன்ற நிர்வாகம்விரும்புகிறது. இத்தகையோர் குறித்து எமக்கு தகவல் தருவதுடன்மட்டுமன்றி அவர்களுக்கும் சரியான புத்திமதிகளை எடுத்துக்கூறி இந்நடவடிக்கையைத் தடுத்துநிறுத்த வேண்டும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி.கே. சிவஞானம் யாழ். நகர மக்களுக்கு பிரசுரம்மூலம் வெளியிட்ட வேண்டுகோளில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# "முத்தமிழ்க் கலைகள் பாதுகாக்கப்படவேண்டும்"

(பண்டத்தரிப்பு]

'எமது முத்தமிழ் கலைகளை இதுவரை காலமும் கிராமத்திலுள்ள நிறுவனங்களும் பாடசாலைகளும் பேணிப்பாதுகாத்து வளர்த்து வந்தன தற்போதைய சூழ்நிலைகளினால் கிராமங்களிலுள்ள நிறுவனங்களும் மற்றும் இயக்கங்களும் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவது மிகவும் குறைந்து விட்டது. ஆகவே பாடசாலைகள் கல்லூரிகளிலேயே எமது முத்தமிழ்க்கலைகள் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும்'

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சபாநாயகம் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது: எமது சிறப்புமிக்க பண்டைய தமிழ்க்கலைகளை அழிய விடாது பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு பாடசாலைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. மாணவர்கள் கல்வித்துறையில் மாத்திரமன்றி கலைத்துறைகளிலும் ஆர்வமுடன் ஈடுபடவேண்டும். தமிழ்மொழி வளர்ச்சிக்குஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் வகையிலேயே பாடசாலைகளில் தமிழ்த்தின விழாக்கள் இடம பெறுகின்றன.''

''இக்கல்லூரி அகிலஇலங்கை ரீதியில் நடைபெற்ற இயல், இசை, நாடகப் போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களையும் பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும் கலைத்துறையில் அதிகஆர்வமும் ஈடுபாடும் கொண்ட இக்கல்லூரி அதிபர் தலைமையில் முத்தமிழ் வளர்ச்சிக்கு இக்கல்லூரி ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது'' என்றார்.

ஆசிரியர் திரு. எஸ். நடராசா உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினார்கள். மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# விரிவுரையாளராக நியமனம்

(வேலணை)

யாழ்.லங்கா சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரியில் நஞ்சு சம்பந்தமான பாடத்தில் விரிவுரையாற்றுவதற்கு யாழ். கொட்டடியைச் சேர்ந்த விஷக்கடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். (கி)

# தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பளையில் அமைந்துள்ள ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது

அன்றிரவு நல்லை ஆதீன சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (மா)

# மட்டக்களப்பில் போக்குவரத்து தடை

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பொலிஸ் நிலையச் சுற்றாடல் பகுதியில் மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிவரை போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் அலுவலகம் அமைந்திருக்கும் பகுதியில் இருந்து, பழைய பொலிஸ் நிலையச் சந்திவரை இந்த போக்குவரத்து தடை மேற்படி நேரத்தில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடன் மூடும்படி கேட்கப்பட்டுள்ளன. (சூ)

# பொருட்காட்சி தமிழ்த்தினம்

(யாழ்ப்பாணம்)

''பொருட்காட்சிகள் கற்றலை இலகுபடுத்துவதுடன் கல்வியைத் தூண்டுவனவாகவும், திறமைகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன'' என்று குளவிசுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலய பொருட்காட்சியிலும், தமிழ்த் தினத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வவனியா கல்வி அதிகாரி திரு. பி. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் திரு. சோமசுந்தசம் தொடர்ந்து பேசுகையில்: 'பாடசாலை சமூகவியல் மன்றம் இப்பிரதேச நாடுகளில் ஆய்வுகள் செய்துழ பல பொருட்களையும் தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது என்றார்

மேற்படி விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். பாலசுந்தரம் பாடசாலையின் வளர்ச்சியைக் கண்டு பெருமிதமடைவதாக குறிப்பிட்டார். இங்கு இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் வட்டாரக்கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் சி கணபதிப்பிள்ளை, எஸ்.அருளானந்தம், வீரபத்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இறுதியில் பாடசாலை மாணவர்களின் முக்தமிழ் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# மரண அறிவித்தல்

## Dr மௌனசாமி இராமலிங்கம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான Dr மௌனசாமி இராமலிங்கம் காலமானார். இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், திருமதி நித்திய லட்சுமி திருநாவுக்கரசு, பரராசசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசேஸ்வரி, ஞானேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr ஸ்ரீராசேஸ்வரன் (வவுனியா ஆதார வைத்தியசாலை) நாகேந்திரன் [கணக்காளர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் இரத்தினபுரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயசுதன், சுபோதினியினதும் பாட்டனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 14-7 84 சனிக்கிழமை இன்று முற்பகல் 10-00 மணிக்கு அவரது திருநெல்வேலி மடக்கு பலாலி றோட் இல்லத்திலிருந்து திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். 886

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.